அடையாள இலக்கம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2014

அவுஸ்திரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition - Australian Society of Graduate Tamils

# எழுத்தறிவுப் போட்டி

**இளைஞர் பிரிவு**
(15-18) வயதுப் பிரிவு)

காலம்: மு. ப. 9.30 மணி, ஞயிற்றுக்கிழமை

நேரம் : 2:00 **மணி**

பரீட்சைத் தாளை வாசிக்க மேலதிக 10 நிமிடங்கள் வழங்கப்படும்

| மொத்தப் புள்ளிகள் | |
|---|---|

# இளைஞர் பிரிவு 2014

**பகுதி 1** **புள்ளிகள்: 20**

அ) சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

1) திருக்குறள் நூலின் மொத்தமாக உள்ள குறட்பாக்கள் எத்தனை?
அ) 133 ஆ) 10 இ) 1000 ஈ) 1330

2) சோழநாட்டின் தலைநகராக விளங்காத நகரம் எது?
அ) மதுரை ஆ) பழையாறு இ) உறையூர் ஈ) கங்கைகொண்ட சோழபுரம்

3) குயில் கூவும் என்பது போல, யானை ...............
அ) கர்ச்சிக்கும் ஆ) பிளிரும் இ) கதறும் ஈ) உறுமும்

4) கற்பிற்கு இலக்கணம் சீதை போல நட்பிற்கு இலக்கணம் யார்?
அ) கும்பகர்ணன் ஆ) கர்ணன் இ) திரௌபதி ஈ) பீஷ்மர்

5) சிலப்பதிகாரத்தில் வரும் பாத்திரம் ஒன்றின் பெயர் அல்லாதது?
அ) மாதவி ஆ) கோவலன் இ) சீவகன் ஈ) செங்குட்டுவன்

6) பட்ட காலிலே படும் என்ற பழமொழியை நிறைவு செய்க ...............
அ) கெட்ட குடியே கெடும் ஆ) தட்டித் தட்டி விழும்
இ) படாத காலிலே படாது ஈ) நடக்காவிட்டால் நடக்காது.

7) வசனக் கவிதையை முதலில் எழுதியவர்?
அ) மு. மேத்தா ஆ) பாரதி இ) வைரமுத்து ஈ) வாலி

8) மகாபாரதத்தைத் தமிழில் எழுதியவர்?
அ) பாரதியார் ஆ) வில்லிபுத்தூரர் இ) கம்பர் ஈ) நக்கீரர்

9) குமரன் என்பதற்கு பெண்பால் குமரி என்பது போல உழவன் என்பதற்கு பெண்பால் என்ன?
அ) உழவி ஆ) உழத்தி இ) மனைவி ஈ) மாதினி

10) ‘குணதிசை’ என்று அழைக்கப்படும் திசை?
அ) வடக்கு ஆ) கிழக்கு இ) தெற்கு ஈ) மேற்கு

11) தற்சமயம் அவுஸ்திரேலியாவிலே வாழும் தமிழ் எழுத்தாளர் ஒருவர்?
அ) மனோ ஜெகேந்திரன் ஆ) சாண்டிலியன்
இ) ரமணி சந்திரன் ஈ) பாரதிதாசன்

12) பண்டைய காலத்தில் தமிழ்ப் பாடல்களை புலவர்கள் எழுதி வைத்தது?
அ) பனை ஓலையில் ஆ) தாமரை இலையில்
இ) காகிதத்தில் ஈ) மான் தோலில்.

13) கம்பராமாயணத்தை எழுதிய கம்பருக்கு சமகாலத்தில் வாழ்ந்த புலவர்?
அ) பாரதியார் ஆ) இளங்கோவடிகள் இ) ஒட்டக்கூத்தர் ஈ) பட்டினத்தார்

14) ‘வசன நடை கைவந்த வல்லாளர்’ என்று போற்றப்படும் பெரியார்?
அ) ஔவையார் ஆ) ஆறுமுக நாவலர்
இ) நா. சுப்பிரமணியம் ஐயர் ஈ) சு. வித்தியானந்தன்

15) மானின் இளையது குட்டி போல சிங்கத்தின் இளையது?
அ) கன்று ஆ) பிள்ளை இ) குருளை ஈ) தவ்வல்.

16) தமிழ் மொழியில் உள்ள மெய் எழுத்துக்களின் எண்ணிக்கை?
அ) 12 ஆ) 18 இ) 246 ஈ) 27

17) பொன்னியின் செல்வன் என்ற வரலாற்று நூலை எழுதியவர்?
அ) இந்திரா நீலமேகம் ஆ) அகிலன்
இ) கல்கி கிருஸ்ணமூர்த்தி ஈ) மு. மேத்தா

18) ‘வெற்றி’ என்பதற்கு எதிர்ச்சொல் ‘தோல்வி’ என்பது போல ‘அண்மை’ என்பதற்கு எதிர்ச்சொல்?
அ) வண்மை ஆ) சேய்மை
இ) தொலைவு ஈ) தூரம்

19) பின்வருவனவற்றில் தென்னிந்திய மொழி அல்லாதது?
அ) தெலுங்கு ஆ) மலையாளம் இ) தமிழ் ஈ) எபிரேயம்

20) தாமரை என்ற சொல்லின் ஒத்த சொல்?
அ) அல்லி ஆ) முல்லை இ) பங்கயம் ஈ) கற்பகம்

| புள்ளிகள் | |
|---|---|

ஆ) பின்வரும் சொற்களை அவற்றின் பொருள் விளங்கும்படி வாக்கியங்களில் அமைக்குக.

(20 **புள்ளிகள்**)

அ) விழை ......................................................................................................................................

......................................................................................................................................

விளை ......................................................................................................................................

......................................................................................................................................

ஆ) விலா ......................................................................................................................................

......................................................................................................................................

விளா ......................................................................................................................................

......................................................................................................................................

இ) வானம்......................................................................................................................................

......................................................................................................................................

வாணம்......................................................................................................................................

......................................................................................................................................

ஈ) குழம்பு......................................................................................................................................

......................................................................................................................................

குளம்பு......................................................................................................................................

......................................................................................................................................

உ) ஒளி......................................................................................................................................

......................................................................................................................................

ஒழி......................................................................................................................................

......................................................................................................................................

| | |
|---|---|
| **புள்ளிகள்** | |

**இ) கீழே கேட்கப்பட்ட கேள்விகளுக்குச் சரியான விடைகளை எழுதுக.**

(புள்ளிகள் - 5×2 = 10)

அ) தமிழில் முக்கனிகள் என்று சொல்லப்படும் பழங்கள் எவை? ............................

..................................................................................................................................

..................................................................................................................................

ஆ) நிலம் என்பது ஐம்பூதங்களில் ஒன்று. மற்றைய நான்கு பூதங்கள் எவை?

..................................................................................................................................

..................................................................................................................................

இ) அவுஸ்திரேலியாவில் வாழும் தமிழக்கவிஞர் ஒருவர் எழுதிய பாடல் ஒன்றின் முதல் வரியை எழுதுக? கவிஞரின் பெயரையும் தருக?..................................................................

..................................................................................................................................

..................................................................................................................................

..................................................................................................................................

ஈ) நீர் சமீபத்தில் வாசித்த புனைகதை ஒன்றின் பெயரைத் தந்து அதை எழுதியவரின் பெயரையும் தருக?

..................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................

உ) எட்டு அல்லது அதற்கு அதிகமான எழுத்துக்களை உடைய தமிழ்ச் சொல் ஒன்றினைக் குறிப்பிடுக?...................................................................

..................................................................................................................................

| புள்ளிகள் | |
|---|---|

# <u>பகுதி 2</u>

**வினாக்களுக்குரிய விடைகளைக் கொடுக்கப்பட்ட தாள்களில் எழுதுக.**

**ஈ) கீழே தரப்பட்ட கவிதையை வாசித்தபின் கேட்கப்பட்ட வினாக்களுக்குச் சரியான பதில்களை எழுதவும்**

(புள்ளிகள் - 5 × 5 = 25)

நாளை வருவான் ஒரு மனிதன் -
ஞாலத்திசைகள் கோலமிட (நாளை)

உள்ளத் தெளிவின் நிலவினிலே
ஒளிரும் நினைவெலாம் சுடரினலே
வெள்ளப்புனலின் கலப்பினிலே
விடியற் பரிதி ஒளியினிலே (நாளை)

மானிலத்துக் களனியினை
மாற்றி உளக்கி வரப்பு இட்டு
ஏணி பெற்ற வாழ்க்கையினை
எருவிட்டு ஆக்கும் நல் உழவன் (நாளை)

சாதி ஒன்றாய் நிறம் ஒன்றாய்
சமயம் ஒன்றாய் மொழி ஒன்றாய்
நீதி ஒன்றாய் நிகர் ஒன்றாய்
நிலை கண்டு ஆளும் விஞ்ஞானி (நாளை)

வினாக்கள்

1) பின்வரும் சொற்களுக்கான பொருளை உமக்குத் தெரிந்த வகையில் எழுதுக.
   பரிதி: ……………………………………..
   புனல்: ……………………………………..
   நிகர்: ……………………………………..
   ஞாலம்: ……………………………………..

2) இந்தக் கவிதை சொல்லவரும் செய்தி என்ன என்பதை நீர் புரிந்து கொண்ட வகையில் கூறுக.

………………………………………………………………………………………..
………………………………………………………………………………………..
………………………………………………………………………………………..
………………………………………………………………………………………..
………………………………………………………………………………………..

3) உள்ளத்தெளிவு மிகுந்த மனிதன் நாளை வருவான் என்று கவிஞர் கூறுவதன் முக்கியத்துவம் என்ன?

………………………………………………………………………………………..
………………………………………………………………………………………..
………………………………………………………………………………………..
………………………………………………………………………………………..
………………………………………………………………………………………..

4) நாளைய மனிதன் உழவனாகவும் நாளை வருவான் என்று கவிஞர் கூறுவதன் முக்கியத்துவம் என்ன?

………………………………………………………………………………………..
………………………………………………………………………………………..
………………………………………………………………………………………..
………………………………………………………………………………………..

5) இந்தப் பாடலைப் படிக்கையில் உமது மனதில் எழும் உணர்ச்சிகள் எவை?

………………………………………………………………………………………..
………………………………………………………………………………………..
………………………………………………………………………………………..
………………………………………………………………………………………..

| | |
|---|---|
| புள்ளிகள் | |

**உ) கீழே தரப்பட்ட தலைப்புகளில் ஒன்றைப்பற்றி 250 சொற்களுக்குக் குறையாத கட்டுரையையோ கடிதத்தையோ வரைக.** (புள்ளிகள் - 25)

அ) நீர் கோடைகால விடுமுறையில் வெளிநாடு சென்று வந்திருக்கிறீர். சேன்ற நாட்டில் நீர் கண்ட காட்சிகளை விளக்கி இந்தியா அல்லது இலங்கையில் வசிக்கும் உமது ஒன்றுவிட்ட சகோதரனுக்கு ஓர் கடிதம் வரைக.

அல்லது

ஆ) "நான் கற்ற மூன்றாவது மொழி ஒன்றுடன் தமிழ் மொழிக்கு உள்ள ஒற்றுமைகளும் வேற்றுமைகளும்" என்ற தலைப்பில் கட்டுரை ஒன்று வரைகை.

அல்லது

இ) 'சமயக் கல்வியின் அவசியம்' என்ற தலைப்பில் கட்டுரை ஒன்று வரைகை.

| புள்ளிகள் | |
|---|---|